**செ. கு. எண்**:402 **நாள்**:8.11.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 8.11.2012

வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 4.11.2012 அன்று திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், நத்ராவாடா கிராமத்தைச் சேர்ந்த திரு. பக்தவச்சலம் என்பவரின் மகன் செல்வன் மேகநாதன், ராஜபத்மாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சந்துரு என்பவரின் மகன் செல்வன் தீனதயாளன் ஆகிய இருவரும் ஓடையில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி கிராமத்தைச் சேர்ந்த திரு.ஜெகன்நாதன் என்பவரின் மனைவி திருமதி அம்மாலு (எ) அம்மாளம்மன் தேங்கிய மழை நீர் குழியில் விழுந்ததால் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன்.

ஓடையில் விழுந்து உயிரிழந்த செல்வன் மேகநாதன், செல்வன் தீனதயாளன் மற்றும் மழை நீர் குழியில் விழுந்து உயிரிழந்த திருமதி அம்மாலு (எ) அம்மாளம்மன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த செல்வன் மேகநாதன், செல்வன் தீனதயாளன் மற்றும் திருமதி அம்மாலு (எ) அம்மாளம்மன் ஆகிய மூன்று நபர்களின் குடும்பங்களுக்கு தலா இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் உதவித் தொகையை உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**